Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC.No. 25 /2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.1**

| Name : | வேணு | Calling: | விவசாயம் |
|---|---|---|---|
| Father's Name: | பெருமாள் | Religion: | இந்து |
| Village: | குந்தானிமேடு | Age: | 70 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.11.2022

SIGN :

அ.சா. 1 முதன்மை விசாரணை.

நான் குந்தானிமேட்டில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் கோபிநாதன், ஜெயவேலு தெரியும். 29.06.2017 ம் தேதி மாலை 05.00 மணிக்கு எனது அப்பா ஏற்கனவே 15 வருடத்திற்கு முன்பு பாகப்பிரிவினை கூர்சீட்டு மூலம் செய்து இருந்தார். அதை அவரவர் சுவாதீனத்தில் இருந்து வந்தோம். அன்று என் அப்பா பெருமாளிடம் மேற்படி சொத்துக்களுக்கு அவர் அவர் பெயரில் பத்திர பதிவு செய்துகொடுக்கும் படி எனது அப்பா வீட்டில் கேட்டேன். அப்பொழுது என் தம்பியின் மகன் கோபி நீ கேட்பதற்கு உரிமையில்லை என்று சொன்னார். ஜெயவேல் அமைதியாக நின்றுகொண்டிருந்தார். நான் அதற்கு உங்கள் இருவருக்கும் இதில் சம்மந்தம் இலலை நீங்கள் இருவரும் வீட்டை விட்டு வெளியே செல்லுங்கள் என்று சொன்னேன். அதற்கு கோபி ங்கோத்தா, ங்கொம்மா, தேவிடியா பையா என்று வாயில் வந்த படி அசிங்கமாக திட்டி நீ ஏன்டா இங்கு வந்து செய்து கொண்டுஇருக்கிறாய் என்றும், ஜெயவேல் நான் அதிமுக கட்சியில் இருக்கிறேன் உன்னால்எதுவும் செய்யமுடியாது என்றும், நானே உங்கள் நிலத்தை ரிஜிட்டர் செய்ய் முடியும் என்று சொன்னார். அப்பொழுது என் அப்பா, அம்மா உயிருடன் இருந்தார்கள். தற்போது உயிரோடு இல்லை. ஜெயவேல் மற்றும் கோபியை எனது அப்பா, அம்மா வெளியே போங்கள் என்று சொன்னார். அதற்கு கோபி கன்னாபின்னா என்று வாயில் வராத வார்த்தைகளால் பேசி என்னை கீழே தள்ளி, கத்தி எடுத்து உன்னை குத்தாமல்

விடமாட்டேன் என்று சொல்லி என் முதுகின் பின்னால் கீறல் போட்டு விட்டார். கோபி கையால் என் இடது பக்க கன்னத்தில் அடித்தால் எனது கடவாய்பற்களில் ஒன்று விழுந்து விட்டது. அதில் நான் கீழே விழுந்து விட்டேன். ஜெயவேல் காலால் என் நெஞ்சின் மீது எட்டி உதைத்தார். பிறகு அங்கிருந்து எனது மகள் கோமதி இருச்சக்கர வாகனத்தில் என்னை சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு மருத்துவமனையில் 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். பின்பு போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்கள் விசாரணையில் நடந்ததை சொன்னேன்.. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது.அதை போலிசாரிடம் மருத்துவமனையில் விசாரணை செய்யும் போது போட்டுக்கொடுத்தேன். **புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிற**து.

அதன் பிறகு 3 நாட்கள் கழித்து என்னை காவல் நிலையம் வரச்சொன்னார்கள். அங்கு தங்கராஜ் உதவி ஆய்வாளர் இருந்தார். அவர் ஊரில் சென்று விசாரணை செய்ததாக சொன்னார். உன் அப்பாவும் இருந்தார் அவரைகேட்டபோது அடித்தது உண்மை என்று சொன்னார். அவருக்கு 92 வயதானதால் அவரால் வரயிலாது என்று சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னார். பிறகு முதல் தகவல் அறிக்கையின் நகல் ஒன்றை எனக்கு வழங்கினார். போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் கத்தியை கொண்டு வந்து போலிசிடம ஒப்படைக்கவில்லை.

எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(Sd./-)வேணு

Taken down by me in open court and ready over to the witness in the presenceof the accused and admitted by the witness to the correction.

(Sd./-) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.